Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுக] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஞூ ஆடிமீ ௪ உ வெள்ளிக்கிழமை (19 JULY 1957) [இல-கரு]

## கூட்டுறவு இயக்கத்தில் சனநாயகம்

### எதேச்சாதிகாரக் கட்டுப்பாட்டிலிருந்து நீங்குவது நோக்கம்

கூட்டுறவாளர் தினத்தில் திரு வி வீரசிங்கம் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள்

வடபகுதிக் கூட்டுறவு இயக்க ஆதரவில் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் சர்வதேசக் கூட்டுறவாளர் தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலங்கையிலே கூட்டுறவு இயக்கத்தின் சனநாயக அம்சத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. எதேச்சாதிகாரமான அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையடைவதே அந்த சனநாயக இலட்சியமாகும். அமைச்சரின் கொள்கை இப்போது கூட்டுறவாளர்களுக்கு ஒருபிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலத்தைப் போன்று அரசாங்கத்தின் தீவிர உதவியோடு இந்த இயக்கத்தின் சனநாயக சுதந்திர இலட்சியத்தைப் போற்றி வளர்ப்பதா அல்லது சக்திவாய்ந்த துரைத்தனத்தின் சர்வாதிகாரப் போக்குக்கு இரையாவதா என்பதைத் தீர்மானிப்பதே இப்பிரச்சினையாகும்.

"கூட்டுறவு இயக்கத்தில் வர்த்தக நிர்வாகம் முதலியவற்றிலே கவனிக்கப்படும் சனநாயக இலட்சியங்கள் சில உண்டு. அவையே இயக்கத்தின் அத்திவாரமாக அமைந்தவையுமாகும். சனநாயகத்தைக் கூட்டுறவு இயக்கத்திற்காகவும் கூட்டுறவு இயக்கத்தைச் சனநாயகத்திற்காகவும் பாதுகாப்பது இப்பகுதி உத்தியோகத்தர்களதும், கூட்டுறவுச் சங்கங்களின் கௌரவ நிர்வாக உத்தியோகத்தர்களதும் நீங்காக் கடமையாகும்.

கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் விவசாய உற்பத்தி, பாவிப்பு, விநியோகம் முதலிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாயிருக்க வேண்டுமென்று அமைச்சர் விரும்புகிறார். தற்போதுள்ள ஒரே நோக்குச் சங்கங்களின் முறையை அகற்றிவிட அவர் விரும்புகிறார். கடல்தொழிற் சங்கங்கள், கைத்தொழில், போக்குவரத்துச்சங்கங்கள் மட்டும் இப்போதுள்ளவை போல் தொடர்ந்திருக்கும். இத்தகைய பல்வேறுநோக்குச் சங்கங்களை அமைக்கும் யோசனையை விவசாயத் திட்டச் சபை கூறியதாகச் சொல்லப்படுகிறது. எந்தத் தேசியத் திட்டத்திலும் விவசாயம் போன்ற ஒருபிரிவின் வேலைத்திட்டம் ஏனைய பிரிவுகளின் வேலைத் திட்டங்களோடு இணைக்கப்பட வேண்டும். அத்தகைய இணைப்பு எதுவும் இருப்பதாக நம்புவதற்கு இடமில்லை. கூட்டுறவுமுறையில் படிப்படியாக எச்சரிக்கையுடன் முன்னேற வேண்டுமென்பது விதியாகும். அப்போதுதான் கூட்டுறவு அமைப்பு கவிழ்ந்துவிடாது நிலை நிற்கும் என்று வடபகுதிக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு வி. வீரசிங்கம் அவர்கள் அத்தருணம் பேசும்போது கூறினர்.

---

## உருத்திரபுரத்தில் தீர்த்தோற்சவம்

நிகழும் ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 26-ந் திகதிக்குச் சரியான (10-8-57) சனிக்கிழமை வரும் திருவோண நட்சத்திரத்தில் உருத்திரபுரம் பெருங்குளத்திற்கு அருகாமையில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் ஆலயத்தில் கதிர்காமத்தில் நடைபெறும் தீர்த்தவேளையில் அதுபோன்ற தீர்த்தத் திருவிழா நடைபெறும். இதற்கு முன்னதாக 26-7-57 தொடக்கம் 10-8-57 வரை விசேட பூசைகள் ஆராதனைகள் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் அன்பர்கள் யாவரும் வந்து வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறுவேண்டுகிறேன்.

இன்னுஞ் சில ஆண்டுகளில் இத்தலம் மிகமிகச் சிறப்புற்று கதிர்காமம் திருக்கேதீச்சரம், திருக்கோணேசர் கோயில்கள்போன்றுசிறப்புற்றேங்கும். அப்படியாகச் சிறப்புற்றேங்கும்படி செய்வதுசைவசமயிகளைப் பொறுத்த கடமையாகும் என்கிறார்

## ஆடித் திருக்கல்யாண உற்சவம்

கோடி மாதவங்கள் செய்து
குன்றினர் தம்மையெல்[லாம்
வீடவே சக்கரத்தால்
எறிந்துபின் அன்புகொண்டு
தேடிமால் செய்த கோயில்
திருஇராமேச்சரத்தை
நாடிவாழ் நெஞ்சமே நீ
நன்னெறியாகுமன்றே.

— அப்பர் தேவாரம்

இராமேச்சுரம் ஸ்ரீ இராமநாதசுவாமி கோவிலில் நிகழும் ஏவிளம்பி ஞூ ஆடி மீ 21 உ (21-7-57) ஞாயிற்றுக்கிழமை நடுப்பகலில் துவஜாரோகணமாகி, 7-ந் திருநாளாகிய (27-7-57) சனிக்கிழமை ஆடி அமாவாசைத் தினத்தன்று சுவாமி சேதுவுக்கு எழுந்தருளித் தீர்த்தோற்சவம் நிகழும். அன்றிரவு மின்சார தீப அலங்காரத்துடன் வெள்ளி இரதத்தில் சுவாமி எழுந்தருளுஞ் சாட்சியும் (1-8-57) வியாழக்கிழமை இரவு திருக்கல்யாண உற்சவமும் மிகவும் சிறப்பாக வழுக்கப்போல் நடைபெறும்.

ஸ்ரீசிவசுப்பிரமணியம் வேலாயுதச்சாமி.

---

அரசியல் அலை

## ஆளுங் கட்சியினர் கேளாவிட்டால் எதிர்க்கட்சிகள் கண்டனம் எடுப்பதிற் பயன் என்ன?

### ஐ. தே. கட்சியைக் கண்டித்த ம. ஐ. மு வின் போக்கு!!

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது நிகழ்த்தப்படும் பேச்சுக்களை எல்லாரும் கவனிக்க வேண்டியது கடமை. முக்கியமாக ஆட்சியாளர் உற்று நோக்கி உரிய மறுமொழி பகரவேண்டியவர்களாவார். ஐ தே. கட்சி ஆட்சி செய்தபொழுது இந்த ஒழுங்கு அத்தியாவசியம் என்று பேசிய சிறீ இலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் இப்பொழுது செய்வதென்ன?

பேச்சுக்கள் பல தரப்பட்டனவாயிருப்பது சகசம். ஓராட்டும் வகையில் உள்ளன சில. துயில் எழுப்பும் துடி துடிப்புடையன சில. எவ்வாறிருந்தாலும் பேச்சு பொருள் அவதானிக்கப்படவேண்டிய தொன்றென்று ஆட்சியாளர் அறியார்களா.

மக்கள் ஆட்சியாம்! மக்கள் குறைகளை எதிர்க்கட்சிப் பக்கத்தார் எடுத்துக் கூறும்பொழுது பாராளுமன்றப் பக்கத்திற் கூட அங்கத்தவர்களில்லையாஞல். இந்த நிலைமையை என்னென்றுரைப்பது?

ஆண்டுக்காண்டு நிகழ்த்தப்படும் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதம் இந்தவகையிலே நடைபெறுவதனல் ஆகும்பயன் என்னையோ?

சமூக வாழ்க்கைநலத்தை அடிப்படையாகக்கொண்ட வரவு செலவுத் திட்டம் என்று கூறும் அரசாங்கத்தின் பொருளாதாரப் போக்கைக் கண்டு ஆட்சிக் கட்சி அங்கத்தவர்களும் கோபங்கொள்ளும்நிலைமையில் மந்திரிமார்கள் கண்டனப் பேச்சுக்களைக் கவனித்து மறுமொழிகொடுப்பதில்லை. ஆட்சி [illegible]...? வெறும் பேச்சில் விவாதம் நடைபெற்று வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்படுதல் சனநாயக ஒழுங்குக்குப் பொருத்தமாகாது.

---

## வண்ணை—வைத்தீஸ்வர சுவாமி கோயில் உற்சவம்

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரசுவாமி கோவிலில் நிகழும் ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 6-ந் திகதி (21-7-57) ஞாயிற்றுக்கிழமை துவஜாரோகணமாகி, 14-ந் தேதியாகிய திங்கட்கிழமை இரதோற்சவமும் அடுத்தநாள் செவ்வாய்க்கிழமையாகிய ஆடிப் பூர தினத்தன்று தீர்த்தோற்சவமும் வழக்கம்போற் சிறப்பாக நடைபெறும் என அறிகின்றோம்.

## வட கல்லூரிகளின் விவசாயத் திட்டம்

யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாண மத்திய கல்லூரி, அர்ச் ஜோன்ஸ் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகிய நான்கு யாழ்ப்பாணக் கல்லூரிகள் ஒன்றுகூடி ஓர் விவசாயத் திட்டத்தை விரைவில் ஆரம்பிப்பார்களாம். இதற்கு வேண்டிய நிலத்தை அரசாங்கம் உதவுமென்றும், ஆரம்ப வருடத்தில் இதற்கு இரண்டு இலட்சம் ரூபா பணம் தேவைப்படும் என்றும் இத்தொடர்பிற்குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## சித்த வைத்தியத்துக்கு ஆதரவு

சித்த வைத்தியம் தமிழர்களின் சொத்து. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் இது இருந்து வருகிறது தமிழ் மொழிக்கும் சித்த வைத்தியத்திற்கும் போதிய ஆதரவில்லா திருப்பது வருந்தத்தக்கது. தமிழ் மொழிக்கும் தமிழ் வைத்திய முறைக்கும் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று அறிஞர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சென்னை திருவல்லிக்கேணியில் நடந்த தமிழ்நாடு சித்த வைத்திய சங்க மகாநாட்டிற் பேசும்போது கூறினர்.

இந்தப் பண்டைய வைத்திய முறைக்குப் புத்துயிரளிப்பதோடு போதிய ஆராய்ச்சியும் அத்துறையிற் செய்யப்படுதல் வேண்டுமென்று சென்னைச் சுகாதார மந்திரி குறிப்பிட்டு வலியுறுத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

ஆடி மீ 10ந் திகதி வியாழக்கிழமையும் 11 ந் திகதி வெள்ளிக்கிழமையும் (25, 26-7-57) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர் தீர்த்த உற்சவங்களின் பொருட்டு, சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்று அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம். அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞூ ஆடி மீ
௪ உ வெள்ளிக்கிழமை

## கல்வித் துறையின் கலங்கிய நிலை

பாராளுமன்றத்திலே வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்பொழுது திருகோணமலைத் தொகுதி அங்கத்தவர் திரு. N. R. இராசவரோதயம் அவர்கள் கல்வித்துறை இன்று கலங்கிய நிலையில் இருக்கின்றதென்று எடுத்துக் காட்டி அத் துறை அமைச்சர் குடும்பக் குழப்பங்களை ஆராய்வதிலும் வேலை மாற்றம் நிறுத்தம் நீக்கம் முதலியவற்றைப் பரிசீலனை செய்வதிலும் கவனஞ் செலுத்துகின்றாரேயன்றிக் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களைக் கொண்டுவர எண்ணுகின்றாரில்லை என மிகப்பொருத்தமாகப் புகன்றிருக்கின்றார்.

பாராளுமன்றத்திலே ஒரு கண்டனப் பண்டிதராகப் பலகாற் பயின்று வந்த திரு. தகநாயக கல்வி அமைச்சராக ஆக்கவேலை செய்வது இயலாது. ஒரு மொழிக் கொள்கையில் உள்ளம் படிந்திருக்கும் இந்த அமைச்சர் தாய் மொழியிற் கல்வி பயிற்றப்படுவதற்குத் தமிழும் நாட்டின் மொழி அமைப்பிலே சம உரிமை பெறுதல் வேண்டும் என்றுணரமாட்டார் என்பது உண்மையே. அந்த வழியில் மட்டும் அன்று. மதம்வளர்க்கும் சங்கங்கள் நடத்துகின்ற பாடசாலைகளைப்பற்றியும் அரசினர் பள்ளிக்கூடங்களைப்பற்றியும் இந்த அமைச்சர் ஒரு நிரந்தரமான நிச்சயமான கொள்கையை நிலைநாட்டத் தவறிவிட்டார்.

ஆசிரியர்கள் இதுவரை அமைச்சரின் போக்கைக் கண்டித்து வந்தார்கள். இப்பொழுது மாணுக்கர்களும் அவ்வாறு கூறுகின்றார்கள். பெற்றாரும் பிறரும் அப்படியே கல்வி அமைச்சைப்பற்றிக் கவலை கொள்கின்றார்கள். இந்த நிலைமையிலே நாட்டின் அத்தியாவசியமான கல்வி வளம் குன்றுவது திண்ணம். சிறார்களும் வயது வந்த மாணுக்கர்களும், ஒழுக்கப் பயிற்சி பெற்றுக கல்வியை உரிய முறையிற் கற்றுப் பயன் பெறுவதெங்ஙன். பள்ளிக்கூடங்களையும் பயிற்சி நிலையங்களையும் பல்கலைக் கழகங்களையும் ஆயிரக் கணக்காக நிறுவி பல கோடி பொன்னை விரயஞ் செய்தும் ஈற்றில் சமூகத்துக்காவது சமய நெறிக்காவது பயன் அளிக்காத வெற்றுக் கல்வியைப் பெறுவதெனில் இந்நாட்டின் கதி யாதாகும்?

மக்கள் ஆட்சியென்பது அரசியல் ஆரவாரங்களையே அடிப்படையாக உள்ளதாய் அமைதல் வேண்டும் என்று பொதுத் தேர்தற் பொழுதை நோக்கிய வண்ணமாய் வாக்காளர்களின் போக்கை அணைந்துசெல்வதாய் அரசியற் றலைவர்கள் எண்ணி அந்த வழியில் இயங்குகின்றார்கள். என்னே இந்த அறியாமை!

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## திருவிளையாடற் புராணம்

### அன்புள்ள மாணவர்களே!

இதுவரை நீங்கள் பெரியபுராணத்து மூவர் சரிதங்களை நன்கு அறிந்துகொண்டீர்கள். இனி,

இந்த ஆண்டு முதலாக உங்களுக்குத் திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம் முதலான நூல்களில் குறிப்பிட்ட சில பகுதிகள் இலக்கிய பாடமாக வைக்கப்பட்டுள்ளன. ஆதலின் இன்று முதலாக அவற்றை நாம் படிப்போம். முதலாவதாகத் திருவிளையாடற் புராணத்தைப் படிப்போம்.

### வரலாறு

முதலில் இத் திருவிளையாடற் புராணத்தின் வரலாறுபற்றிச் சுருக்கமாகக் கூறுவேன். கவனமாக அவதானித்துக் கொள்ளுங்கள்.

திருக்கைலாயத்திலே சிவதீர்த்தக் கரையிலே ஆயிரங்கான் மண்டம் ஒன்று உண்டு அம்மண்டபத்திலே சூத முனிவர் இருந்தார். (சூத முனிவர் வியாச முனிவருடைய சீடர்களுள் ஒருவர் இவர்தான் நைமிசாரணிய வனத்திலேயிருந்த முனிவர்களுக்குப் புராணங்களையெல்லாம் உபதேசித்தவர்.) முத்தியை விரும்பிய சம்புத்தர், சதானந்தர் முதலாம் முனிவர்கள் அவரை வணங்கிப் பரமசிவன் எழுந்தருளியிருக்கும் விசேட தலமொன்று கூறுமாறு விண்ணப்பஞ் செய்து நின்றனர்.

அவர்களுடைய விண்ணப்பத்தை உளங்கொண்ட சூத முனிவர் அவர்களை நோக்கி, "முருகக் கடவுள் அகத்தியருக்கு அருளிச்செய்த சங்கரசங்கிதையிலே மூன்று விசேடமும் பொருந்திய தலமொன்று கூறப்படுகின்றது; முத்தியை விரும்புவோருக்கு அது எளிதிலே கொடுப்பது. அருளுருக் கொண்டு பரமசிவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளியது. அத்தலத்தின் பெயர் திருவாலவாய். இது பூலோக சிவலோகமெனவும்படும். அத்தல விசேடங்களையும் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் எமது ஆசாரியார் எமக்குத் திருவாய் மலர்ந்தருளியபடியே நாம் உங்களுக்குச்சொல்வோம்' என்று சூதமுனிவர் சம்புத்தர் சதானந்தர் முதலான முனிவர்களுக்குக் கூறியருளினர். அதுதான் திருவிளையாடற் புராணம்.

இப் புராணத்திலே 64 திருவிளையாடல்களைப் பற்றிக் கூறப்படுகின்றது. இதிலே உங்கட்கு நாற்பதாவது படலம். அதாவது வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம் முதல் அறுபத்தோராவது மண் சுமந்த படலம் இறுதியாகவுள்ள இருபத்திரண்டு படலங்கள் பாடமாகவுள்ளன.

இத்திருவிளையாடற் புராணம் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க்காண்டம் எனனும் முப் பிரிவுகளை யுடையது. வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியதுமுதல் நாரைக்கு முத்தி கொடுத்தமையிறுதியாகவுள்ள ஒன்பது படலங்கள் கூடற்காண்டத்திலும், திருவாலவாயான் படல முதல் மண் சுமந்த படலமிறுதியாகவுள்ள பதின்மூன்று படலங்கள் திருவாலவாய்காண்டத்திலுமுள்ளன. திருவிளையாடற் புராணம் மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடற் புராணம் மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களைக் கூறுவது.

### தல விசேடம்

எல்லா வுலகங்களிலும் புண்ணிய தலங்கள் சிறந்தன. அவற்றினுள்ளே சிவ தலங்கள் சிறந்தன. அவற்றினுள்ளும் சிதம்பரம், காசி, திருக்காளத்தி திருவாலவாய் நான்கும் சிறந்தன. இவற்றுட் சிதம்பரம் தரிசிக்க முத்தி தரும். காசி அங்கே இறந்தவர்களுக்கு முத்தியளிக்கும். திருக்காளத்தி வழிபட்டவர்களுக்கு முத்தியை வழங்கும். கேட்டவர்களுக்குப் போகத்தையும் முத்தியையும் அளிக்கும் திருவாலவாய். ஆதலால் திருவாலவாய் இந் நான்கினுள்ளும் சிறந்ததாகும். இது மதுரை கூடல், திருவாலவாய் எனப் பல பெயர்களான் வழங்கப்படும்.

### தீர்த்த விசேடம்

சோமசுந்தரக் கடவுளானவர் கடல்களும் மேகங்களும், கங்கை, காவிரி முதலிய நதிகளும் பிறவுந் தோன்று முன்னே உண்டாக்கிய தீர்த்தம் பொற்றாமரை வாவியாகும். அதனைப் பார்த்தால் பாவம் நீங்கும் நெருப்பை நினைவின்றித் தீண்டினுலும் சுடுமல்லவா? அதேபோலப் பொற்றாமரை வாவியை நினைவின்றித் தீண்டினுலும் அது, மலத்தைக் கெடுத்து முத்தியைக் கொடுக்கும். இப் பொற்றாமரைத் தீர்த்த மானது தரும தீர்த்தம், அருத்த தீர்த்தம், காம தீர்த்தம், மோட்ச தீர்த்தம் எனவும் படும்.

### மூர்த்தி விசேடம்

மூல லிங்கமாகிய சிவலிங்கம் முதன் முதற் தோன்றியது இங்கேதான். இச் சிவலிங்கத்துக்கு ஒப்பானதும் உயர்வானதும் மூவுலகத்தினும் இல்லை. இச் சிவலிங்கத்தைத் தரிசித்தோர் உரையும் உணர்வும் ஒடுங்கிச் சுத்த சிவசோதியைத் தரிசிப்பர். இங்குதான் சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் சோமசுந்தரப் பெருமானுகி நிகழ்த்தினர்.

இதனைப் பரஞ்சோதி மாமுனிவர் செய்யுள் ரூபமாகப் பாடியருளினர். கற்ஞேரும் மற்றோருமாகிய யாவருக்கும் எளிதிலே பயன்படுத்தும் பொருட்டாக நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்கள் வசன ரூபமாகச் செய்தருளினுர். ஆதலினுல் இது திருவிளையாடற் புராண வசனம் எனப்பட்டது.

இதுவரை திருவிளையாடற்புராணத்தின் வரலாறு அதனைச் சூத முனிவர், தம்மை வேண்டிய முனிவர்களுக் குபதேசஞ் செய்தமை, தலவிசேடம், தீர்த்த விசேடம் என்பனபற்றி அறிந்து கொண்டீர்கள்.

அடுத்த பாடத்தில் வருணனுக்குச் சிவலோகங் காட்டிய படலத்தைப் படிப்போம் நன்கு வாசித்துக் கொண்டு வாருங்கள்.

வணக்கம்.

— —0— —

## யாழ்ப்பாண நூல் நிலையம்

யாழ்ப்பாண நூல் நிலையச் சபையின் வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு ரி. அருமைநாயகம் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. வருடாந்த அறிக்கை வரவு செலவுக் கணக்கு என்பன வாசித்து ஏற்கப்பெற்ற பின் புது வருட உத்தியோகத்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பெற்றனர்.

தலைவர் திரு. எஸ். குமாரசூரியர். உப தலைவர்கள் காதி எம். எம். சுல்தான் திரு. ரி. அருமைநாயகம், ரி. முத்துக்குமாரு. காரியதரிசி திரு. சி. பாலசிங்கம் உதவிக் காரியதரிசி திரு. எஸ். சிவஞானம், தனதிகாரி திரு. எஸ். சி. மகாதேவா, பதினைந்து பேர் உறுப்பினராயுள்ள நிருவாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பெற்றது.

திரு. செல்வநாயகத்துக்கு

## திரிசிங்கள எச்சரிக்கை

திரிசிங்கள ஜாதிக பெரமுனைச் சேனுதிபதி ஸ்ரீ எச். டபிள்யு. இரம்புக்வெல திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு ஓர் பகிரங்க எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். ஒரு சிறு பகுதியின் சாரம் இங்கே காணவருகின்றது.

எழுஇலட்சத்து எழுபதினுயிரம் தமிழ் மக்கள் தான் இலங்கையில் வாழ்கிறார்கள். அவர்களுள் ஐந்து இலட்சத்து ஐம்பதினுயிரம் தமிழர்கள் சிங்களப்பகுதிகளில் வாழுகிறார்கள். பெரும்பான்மையினரின் அன்பையும், ஆதரவையும் நம்பிக்கையையும் சிறுபான்மையினர் ஒருமுறை இழந்தால் ஒவ்வொரு சந்து பொந்துகளில், காரியாலயத்தில், வேலைத்தலத்தில், வியாபார நிலையங்களில், வருடம் முழுதும், காலையில், மாலையில், இரவில் பகலில், ஒவ்வொரு நிமிடத்திலும் ஆபத்து நேரிடும் என்பதை எந்தச் சட்டமும் தடுப்பு நடவடிக்கையும் தடுக்க முடியாது என்று ஸ்ரீ இலஸ்கி கூறுகிறார் என்று எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் மேற்படிசேனுதிபதி.

நீதி நியாயமில்லாத முறையில் அரசாங்க சேவையில் தமிழர் இடம் பெற்றுள்ளனர் எனறு குறிப்பிட்டு அவர்களுக்கு திரு. அழகரத்தினத்துக்கும். திரு. கனகசுந்தரத்துக்கும் வந்த கதிதான் வருமென்று மேலும் எச்சரிக்கை செய்து சிங்கள நாட்டிலுள்ள தமிழர்களைத் திருப்பி அழைக்கும்படி திரு. செல்வநாயகத்துக்குச் சொல்லுகின்றார் சேனுதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கான பத்தியுள்ள வாழ்வே உண்மையான சமய நெறி

## பாண்டித்தியமும் புறத்தோற்றமும் பெரும் பயன் தருவனவல்ல

(சென்னைச் சர்வகலாசாலையில் ஸ்ரீ சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் செய்த ஓர் சொற்பொழிவிலுள்ள ஒரு பகுதியின் சாரம்.)

எங்கள் நாட்டு மக்கள் வாழ்க்கையில் பல சிக்கல்கள் எங்களை எதிர்நோக்கியபடி நிற்கின்றன. எங்களுடைய ஒழுக்க முறைகளுக்கும் ஆன்மார்த்த வாழ்க்கைக்கும் புத்துயிரளிக்க வேண்டும்; புற ஒழுக்கங்கள் புனிதமடையும்பொருட்டு அகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். ஆனல் சமய நூல்களில் பாண்டித்தியமடைதலைப் பயபக்தி, சமயவாழ்க்கை முறை என்பவற்ருேடு ஒன்றுபட்டதாக நினைத்து மயங்கி விடக்கூடாது.

ஒருவர் சமஸ்கிருத பண்டிதராயிருக்கலாம். சங்கராசாரியார் வெளியிட்ட நூல்களைக் கற்றறிந்த நிபுணராயிருக்கலாம் அப்படியிருந்தும் கடவுட்பக்தி சமய வாழ்க்கை முறை என்பன அவருக்கு அன்னியமாயுமிருக்கலாம். கடவுட் பக்தியானது, கடவுளின் கிருபைக்குரித்தாக்கி ஒருவரை நல்லவராக்குகின்றது; ஆனல் பாண்டித்தியமோ முறையற்ற பேராசையைப் பூர்த்திசெய்வதும் கல்விச் செருக்கை உண்டாக்குவதுமாயிருக்கின்றது. ஓர் பெருமகனை நடிக்க ஓர் குரங்கைப் பழக்கலாம். நல்ல ஆடை ஆபரணமணிந்து நல்ல பழக்க வழக்கமுள்ளவர் போல அது நடிக்களாம். ஆனல் அது குரங்கே குரங்குதான். இதன் வெளிச் செயல்களுக்கும் உள்ளக் கருத்துக்கும் தொடர்பேயில்லை. நல்லவை என்றபடியால் நல்ல செயல்களைக் குரங்கு செய்வதில்லை. அது பழகியபடியால் அவற்றை அப்படிச் செய்கின்றது. ஒருவருடைய படிப்பும் புறத்தோற்றமும் ஓர் பக்தனுடையவை போலிருக்கலாம். ஆனல் படித்ததைத் தவிர அவருடைய மனம் கடவுள்மீது அன்பு பூண்டுள்ளதோ என்பது கேட்கத்தக்க கேள்வி. ஆகையினலேயே ஆராய்ச்சியால் மூளை விவேகத்தால், கல்வியால் கடவுளைக்காணமுடியாது. உள்ளமானது இறைவன் திருவருளை உணமையாக வேண்டியபொழுதே திருவருளைப் பெறுதல் ஆகும் என்று இருடிகள் கூறியுள்ளனர். பல பண்டிதர்களும் தத்துவ ஞானிகளும எங்கள் மத்தியிலிருக்கிறார்கள் ஆனல் நல்ல பக்தியுள்ள மக்களை மேலும் தேவைப்படுகிருேம்.

கல்விப் பெருமையைக் காண்பிப்பதற்காக நாங்கள் சமய நூல்களைக் கற்கக்கூடாது. எங்கள் மனங்களைக் கடவுள்மாட்டு நாங்கள் திருப்ப வேண்டும். நாங்கள் என்னவாயிருக்கிருேம். எதை எதைச் செய்கிருேம். அன்னையும் பிதாவுமாகிய இறைவன் சந்நிதியிலேயே எப்படியுமிருந்து எதையுஞ் செய்கின்ருேம். அந்தப் பரம பிதாவுக்கும் மாதாவுக்கும் எங்கள் அன்பை உரித்தாக்கி என்றும் நீங்காத எங்கள் நண்பனுகவும் வழிகாட்டியாகவும் நாங்கள் கடவுளை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். நாங்கள் எதைச் செய்யும் பொழுதும் கடவுளை மனத்திலிருத்திக் கொள்ளுதல்வேண்டும்.

நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஆனல் கடவுள் ஒருவர் இருக்கிருரா? என்று ஒருவர் கேட்கலாம். சரி. ஒரு புளியம் விதையை எடுங்கள். அந்தச் சிறிய பொருளுள் ஏதோ நூதனமான எல்லாம் வைக்கப்பெற்றிருக்கின்றன. அந்த விதையை ஈர நிலத்துள் இட்டுவிடுங்கள். அது முளைத்து வளர்ந்து இலைகளும் பூக்களும் காய்களும் கொம்பர்களுமாய்ப் பெருங்காட்சியளிககின்றது இவை எல்லாம் ஒரு சிறிய விதையினுள் வைக்கப்பட்டிருந்தன. இப்படியே கோழி, மயில் முதலிய பறவைகளின் முட்டைகளும் அதிசயமான பொருள்களை உள்ளடக்கியிருக்கின்றன மாதாவின் கருவுள் இருக்கும் பொருளைப்பற்றி அறிவோமானல் அது ஓர் ஊசியின் தலையிலும் பெரியதல்ல என்பதைக் காண்கின்ருேம். அத்தகைய சிறு பொருளிலிருந்தே இந்த அதிசயமான மனிதன் வெளிவருகின்ருன். வாசிக்கவும் கணக்கிடவும் மாத்திரம் நாம் கல்விக்கழகங்களிற் படிப்பதில்லை. நாங்கள் எங்கள் மத்தியில் நிகழ்பவற்றைப் பார்த்துச் சிந்திக்கவும் பழுகுகின்ருேம். இவ்வாறு உண்மையான சமய வாழ்க்கைக்கு —ஒழுங்கான பயபக்தியுள்ள வாழ்க்கைக்கு – ஆயத்தஞ் செய்கிருேம். இவ்வித வாழ்க்கைக்கு விஞ்ஞானம் எதிரானதல்ல. அதற்கு உதவியாகவேயுள்ளது.

நாங்கள்காணும்பொருள்களின் உயிர்நாடியாயுள்ளவற்றை ஆராய்வோமானல் நாங்கள் விஞ்ஞானத்துக்கு அப்பாற் சென்று ஆன்ம தத்துவ சாத்திரம் காண்பிக்கும் சமய நெறியுட் செல்கின்ருேம். விஞ்ஞானத்துக்கும் சமயத்துக்கும் எல்லையாயுள்ளது ஆன்ம தத்துவ சாத்திரமாகும். அது பொதுவாக எதிர் மறையாயே உள்ளது. சமயம் ஏன் வேண்டப்படுகின்றது என்ற கேள்விக்கு வேண்டிய நியாயத்தை அது நிறைவுறக் காண்பிக்கின்றது.

காஷ்மீர் நிலைமை பற்றிய

## பல்கோணக் காட்சி

பாக்கிஸ்தான் முதல்மந்திரி ஸ்ரீ எச்.எஸ். சுகிர்தவதி அவர்களுக்குப் பத்திரிகையாளர்கள் அளித்த விருந்விருந்தொன்றின்போது காஷ்மீர் விஷயத்தில் அமெரிக்க உதவியைக் கேட்டீர்களா என்று பத்திரிகையாளர்கள் அவரைக் கேட்டனர். ஆம், அமெரிக்க உதவி, பிரித்தானியஉதவி, நல்லெண்ணமுள்ள எல்லா நாடுகளின் உதவியையும் நான் கேட்டுள்ளேன்; எங்கள் பக்கத்தில் நீதியிருப்பதை அவர்கள் காண்கிருர்கள் என்பதைக் கண்டு நான் மகிழுகின்றேன் என்று அவர் மறுமொழி கொடுத்தார்.

அமெரிக்க சனதிபதியும் பாக்கிஸ்தான் முதல்மந்திரியும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில், காஷ்மீர்ப்பிணக்குக் காலதாமசமின்றி ஐக்கிய நாட்டுச் சபைக் கொள்கைகளின்படி நன்கு தீர்க்கப்படும் என்று நம்புவதாகக் கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றனர்.

காஷ்மீர்ப் பிணக்குப் பற்றி வாக்கெடுப்பொன்றை நடத்தாததுபற்றி இந்தியாவைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றைப் பாதுகாப்புச் சபையிற் கொண்டு வரும்படி பாக்கிஸ்தான் முதல்மந்திரி அமெரிக்க சனதிபதியுடன் நடத்திய பேச்சொன்றில் கேட்டார் என்றும் அக்கேள்விக்கு அமெரிக்கா சிறிதும் இடங்கொடுக்கவில்லை யென்றும் மற்ருேர் செய்தி சொல்லுகின்றது.

# திருக்கேதீச்சர வரலாறு

## கால எல்லை காண முடியாத பழைமை

### சைவ மக்கள் செய்யவேண்டிய கடன்

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

ஈழநாடு முன்னுள் இராக்கதர்களுக்கு இருப்பிடமாக இருந்ததுஎன இராமாயண இதிகாசம் கூறுகின்றது. இது ஒருகாலத்துக்கதை. அதற்கு முன் தேவர்களுக்கு இருப்பிடமாக இருந்ததெனப் புராணம் கூறுகின்றது. ஒரு காலத்தில் இமயமலையின் பொன் மயமாகிய சிகரம் ஒன்று முரிந்து கடலில் விழுந்தது அந்தப் பொறிச் சிகரமே இலங்கை. இதனை, "பொன் மயமாநகர் இலங்கை" எனக் கம்பநாடரும் கூறிப் போந்தனர். பொன்னுக்கு ஈழம் என்பதும் ஒருபெயர். அதனல் இலங்கை ஈழம் எனவும் பெயர் பெறும்.

ஆகவே இலங்கையானது முதல் தேவர்களுக்கு உறைவிடமாக இருந்தது பின் இராக்கதர்கள் தவ வலிமையினல் தம் வசப்படுத்திக் கொண்டார்கள். ஒருமுறை தேவர்களின் முறையீட்டால் விஷ்ணு மூர்த்தி இராக்கதர்களை இலங்கையினின்றும் ஓட்டிப் பாதலத்துட் புகும்படி செய்தனர். அதன்பிறகு இலங்கை வெறுமையாய்க் கிடந்தது. அப்பொழுது விச்சிரவசு என்னும் முனிவரின் புதல்வர் வைச்சிரவணன் என வழங்குகின்ற குபேரன் இயக்க கணத்தைச் சேர்ந்தவன் தவம் செய்து வெறுமையாய்க் கிடந்த இலங்கைக்கு அரசனுனன். அவனுடைய காலத்திலேயே சைவ சமயம் இலங்கையில் பரவி [illegible] இலங்கை சிவஷேத்திர நாடாய் இருந்தது, திருமூலரும் இலங்கையைச் சிவஷேத்திரம் என்கின்ருர். எனவே திருக்கேதீச்சரம் கோணேச்சரம் போன்ற தலங்கள் மிக மிகத் தொன்மை வாய்ந்த தலங்களாகும். அதுவுமல்லாமல் ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருந் தலங்களுமாகும். ஈழம் என்ற பூமி எப்போது தோன்றியதோ அன்றே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் சுயம்புலிங்கமாய் மாதோட்டத்திலே தோற்றினர். இதன் பின்பு தான் கேது, மாவட்டா, வடநாட்டு இருடிகள் முதலானேர் அறிந்து வழிபாடாற்றினர்கள். ஆகவே முடிவும் முதலுமில்லாத கேதீச்சரநாதப்பெருமானை ஊனக் கண்கொண்டு காலவரையறைசெய்து ஆலயம் எப்போது தோன்றியது யார்வணங்கினர்கள்என்று இக்கால ஆங்கிலக் கல்வித் தமிழ்ப் புதுமக்கள் வரையறுக்கும் சில நூற்ருண்டுகளுக்குள் அடங்காமைமலை விளக்கென ஒரு தலையாமென்க.

இராவணேஸ்வரன் ஆறு கோடி சிவாலயமும், விபீஷணன் மூன்று கோடி சிவாலயமுமாக ஒன்பது கோடி சிவாலயங்கள் இலங்கையில் ஒருகாலத்தில் அமைத்தனர். இதில் ஒரு [illegible]தனம் இல்லை. தற்போது அநுராதபுரம், பொலனறுவை என்ற இடங்களில் எவ்வாறு புத்த சின்னங்கள் காடுகளிற் பரந்துபட்டுக் கிடந்தனவோ அவ்வாறு முன்ஞெரு காலத்தில் இலங்கை முழுவதும் சிவலிங்க மயமாகவேஇருந்தது. அதற்கு ஆட்சேபமில்லை.

விபீஷணன் அரசுசெய்த காலத்தில் பாரத நாட்டின் வட பாகத்தில் இருந்தும் தென்பாகத்தில் இருந்தும் தமிழர் குடியேறினதாகக் கூறப்படுகிறது. ஆகவே ஆதியிற் குடியேறியோர் தமிழர் என்பதும் அவர்கள் மதம் சைவம் என்பதும் பெறப்படும். இலங்கையானது வழிவழிச் சைவ நாடு. ஒருகால் பறங்கியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அக்காலம் இலங்கை சைவ ஒளி குன்றி இருள் நிறைந்த காடாகவே இருந்தது. இப்படி இருநூறு வருடங்கள் வரையில் இருந்தது. இதன்பின் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஞான சூரியன் எனத் திகழ்ந்த எங்கள் சற்குருநாதவள்ளல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையா அவர்கள் ஒரு சைவ ஒளி விளக்கை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஏற்றினர்கள். அதன்பின்பே தொன்மைபோல் சைவமும் தமிழும் பிரகாசித்தன. அவர் கருத்திற் கொண்ட திருக்கேதீச்சரத் திருப்பணிகது அக்காலம் அரசாங்கம் இடராய் இருந்தது. திருக்கேதீச்சரம்பற்றி நாவலர் காலத்துக்குப் பிறபட்ட விஷயங்கள் ஓரளவுக்குப் பலருக்கும் தெரியும். அதற்கு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிராம முன்னேற்றச் சங்கத்தில்
# மொழிப் பிரேரணை

பலாலி-வசாவிளான் கிராமமுன்னேற்றச்சங்கத்தின் சென்ற நிருவாக சபைக்கூட்டத்திற்கொண்டு வரப்பட்டபிரேரணை ஒன்று தலைவர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் நன்கு விளக்கியபின் சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

அது "இலங்கையில் வாழும் தமிழ் மாணவர் சிங்கள மொழியையும் சிங்கள மாணவர் தமிழ் மொழியையும் பிரதான பாடமாகப் பாடசாலைகளிற் கற்பதற்குரிய ஒழுங்கினை அரசாங்கம் உடனடியாகச் செய்து கொள்ளின் மொழிப் பிரச்சினை மிகச் சுலபமாகத் தீர்ந்துவிடும். அன்றியும் சிங்களம்தமிழ்என்னும்இரு மொழிகளும் அரசாங்க பாஷைகளாக வருவதற்கு மக்களால் எவ்வித தடைகளும் உண்டாகாது. இலங்கையின் அரசியல் மிகவும் ஓங்கி வளரும். வகுப்புவாதம் ஒழிந்துவிடும். இது பற்றி கௌரவ பிரதம மந்திரியவர்களையும், கல்வி மந்திரியவர்களையும், நிதி மந்திரியவர்களையும், அதி ஊக்கம் காட்டவேண்டும் என, இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது என்பதாகும்.

# அணிந்துரை அரங்கம்

## சிவஞான போதசாரம்

THE QUINTESSENCE OF
SIVA — GNANA — BODHAM

ஆசிரியர்: சித்தாந்த மாணவன்வட்டுக்கோட்டை

பிரதிவிலை: ரூபா 1-80

பெறுமிடம்: (விவேகானந்த புத்தகசாலை யாழ்ப்பாணம்).

சிவஞானபோதம் சைவ சித்தாந்தத்தமிழ்முதல்நூல். இந்நூற்பொருள் விளங்குதற்கரியது. இதன்பொருளை விரித்து விளக்குமாறு சிவஞான பாடியத்தைச் செய்தருளினர் சிவஞான சுவாமிகள். சிவஞானசித்தியாரில் விரித்துரைத்தார் அருணந்திசிவாசாரியார். ஒவ்வோராற்ருல் இவை கற்போர்க்குக் கடினமானவையா யுள்ளன.

இந்நிலைமையில் "தாழ்வெனுந் தன்மை"யாகிய சைவப்பண்பாட்டைத் தமக்கு அணிகலனுகக் கொண்டு "சித்தாந்த மாணவன்" என்னும் புனைபெயருடன் மறைந்து நிற்கும் சித்தாந்த அறிஞர், சிவஞான போதத்துக்கு ஓர் திறவுகோலாயமையும் "சிவஞானபோதசாரம்" என்னும் இந்நூலைச் சைவ உலகிற்குத் தந்துதவ முன்வந்தமை போற்றுதற்குரிய தொன்ருகும். இலகுவான இனிய தமிழ் வசன நடையில் பெயருக்கேற்றவாறு பொருளைத் தந்து இடையிடையே அடைப்புக் குறிகளுள் ஆங்கில விளக்கங்களும் தரப்பெற்றிருத்தல் இதற்கோர் தனிச் சிறப்பாகும்.

(இதில் 36-ம் 59-ம் பக்கங்களில் முறையே ஈசுர தத்துவமும் உதான வாயுவும் சேர்க்கப்படுதலுடன் 37-ம், 71-ம், 90-ம், 92-ம் 96-ம், 102-ம் பக்கங்களில் முறையேகலையின்தொழில், பரஞானம், இருவினைஒப்பு மலபரிபாகம், சகலர்க்குப் படர்க்கையில் உபதேசம், சிவரூபம், ஆன்மரூபம் என்பவைபற்றிச் சந்தேக நிவிர்த்தி தருதல் இதன் சிறப்பை மேலும் பெருக்கும்).

விளங்குதற்கரிய பொருளை எளிதில் விளங்க இந்நூல் உதவுகின்றதாகலின், சிவஞானபோதப்பொருளை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் இதை விரும்பி வரவேற்கவேண்டியவராவர். சைவமக்களாவோர் அங்ஙனம் வரவேற்று இன்புறுவார்களாக.

## திருக்கேதீச்சர வரலாறு

3-ம் பக்கத்தொடர்ச்சி

முற்பட்டவிஷயம் ஒருவருக்கும் செவ்வனே தெரியாது. இதுவும் ஆண்டவன் மறைப்பாகும். இத்தல மகிமையைக் காட்டும் இரு தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன. அவைகளே போதுமானவை. அப்பதிகங்களை மனங்குளிரப் படித்து முடிவும் முதலும் இல்லாத எம்பெருமானுகிய கேதீச்சரநாதர் திருவடிகளைப் பூசிப்பதே சைவ மக்கள் கடனுகும்.

# நட்பின் மாண்பு

## புலவர் உள்ளத்தெழும் கருத்தோவியம்

ஸ்ரீ வ. குகசர்மா

ஊன்பொதி பசுங்குடையார் புறநானூற்றுப் பாடல்கள் பாடிய புலவர்களுள் ஒருவர். நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்னும் சேரஅரசனின் உற்ற நண்பன். இப்பெரும் புலவர் தமது நண்பராகிய இளச்சேட் சென்னியைக் காணச் சென்ருர். அப்பொழுது அந்த அரசன் தான் நடத்திய போர்களில் வெற்றிகண்டு திரும்பியிருந்தான். இளமை தொட்டே அறவுரை பகர்ந்து நண்பன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்த புலவர் அன்னவன் வெற்றி கண்டு அகமகிழ்தல் இயல்பு தானே. புலவர் இளஞ்சேட் சென்னியின் மாளிகை வாசலை அடைந்த பொழுது மனவருத்தத்தைக் கொடுக்கும் ஒரு காட்சியைக் கண்டார். அரசன் போரில் வெற்றியாகப் பெற்ற பல பொருட்களைப் பரிசிலாகப் பெற விரும்பிப் பல புலவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் முன்பும் அதே அரசனிடத்தில் பல பரிசில்கள் பெற்றவர்கள். அரசனே தன் வழக்கம் போல பரிசில்களை விரைவாகக் கொடுத்து அவர்களை அனுப்பவில்லை. அதற்குக் காரணங்களும் இருந்தன. அரசன் தான் நடத்திய போர்களினுற் களைப்புற்றிருந்தான். முன்பும் பரிசில்கள் பெற்றவர்கள் தானே, கொஞ்சம் காலந் தாழ்த்திக் கொடுத்தால் என்ன என்ற அலட்சிய பாவமும் அவனிடமிருந்தது. நண்பனின் உள்ளத்தில் உள்ள எண்ணத்தைப் புலவரும் உணர்ந்தார். இவ்வாறு காலம் தாழ்த்துவதால் புலவர்கள் அரசனைப் பற்றித் தவருக நினைப்பார்கள். இதனுல் அரசன் புகழ் பழுதுபடும் எனக் கருதுகிருர். ஒரு நல்ல நண்பன் தன் நண்பன் புகழுக்கு மாசு வருவதை விரும்பமாட்டான்.

மன்னன் புகழ் குன்றுவதை புலவர்விரும்பவில்லை. நட்புரிமையால் விரைவில் உள்ளேசென்று அரசனைக் கண்டு சொல்லுகின்ருர் "அரசே! மழையானது முன்பு நன்ருகப் பெய்து விட்டேனென்று அதற்குரிய காலத்தில் பெய்யாவிட்டால், பயிரானது முன் விளைந்துவிட்டதென்று பின் விளையாது விட்டால் எவ்வித உயிரும் இவ்வுலகில் நிலைக்கமாட்டாது. ஆகையால் முன்னே கொடுத்தீரென்பதற்காகக் கொடை மறுத்தல் சீரிதன்று என எடுத்துக் காட்டுகின்ருர். அவற்றைப் பின்வரும் புறநானூற்று வரிகளிற் காண்கிருேம்.

"கழிந்தது பொழுதென வான்கண்மாறினும் தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும் எல்லாவுயிர்க்கு மில்லால் வாழ்க்கை இன்னும் தம்மென மெம்மனே ரிரப்பின் முன்னுங் கொண்டிரென நும்மனோர் மறுத்தல் இன்னுதம்ம".

இதனைக் கேட்ட பின்பு அரசன் புலவர்களை அதிக நேரம் காத்திருக்க வைக்கவில்லை.

மற்ருேர் இடத்தில் இப்புலவர் யுத்தகளத்தை ஏர் பூட்டியுழும் வயலோடு ஒப்பிடுகிருர். இங்கே போர்க்களத்தின் காட்சி பயங்கரமாகச் சித்தரிக்கப்படுகின்றது. "வில்லும் வாழுமாகிய படைக்கலங்கள் விரும்பிய தலைகளாகிய கனிகளைப் பெய்ய, இரத்த நீரானது பரவிச் செல்ல விளைந்த கதிர்களாம் தலைகளை யறுத்துக் குவித்து, பிணங்களாகிய போர்க்குவியல் அழியும்படி யானையை எருதாகவும், வாட் படையை பனைமடலாகவும் கொண்டு யுத்தகளம் பொலியக் கடவதென்று வாழ்த்தி களம் வலம்வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

அரசனிடத்திலே புலவரும் அவர் சுற்றத்தவரும் பரிசுபெறச் செல்கிருர்கள். அவனே பகைவரிடமிருந்து கவர்ந்த அணிகலன் பலவற்றையும் பரிசாக அளிக்கிருன். அரசர்க்குரிய அணிகலன்களாதலால் அவற்றை அணிய அறியாத புலவரின் சுற்றம், செவிக்குரியவற்றை விரலிலும், அரைக்குரியவற்றைக் கழுத்திலும், கழுத்தணியை இடையிலும் அணிந்து கண்டோர் நகைக்கும் காட்சியினராயினர் புலவர் அதற்கொரு உவமை கூறுகிருர். சீதாதேவியை இராவணன் தூக்கிச் சென்றபொழுது அவராற் கழற்றியெறியப்பட்ட ஆபரணங்களைக் குரங்குக் கூட்டங்கள் அணிந்து பொலிந்தமை போன்றிருந்ததெனப் பின்வரும் அடிகளில் எடுத்துக் காட்டுகின்ருர்.

"விரற்செறி மரபின விரற்செறிக்குநரும் செவித் தொடர் மரபின விரற்செறிக்குநரும் அரைக்கமை மரபின மிடற்றியாக்குநரும் கடுந்தெறலிராமனுடன் புணர் சீதையை வலித்தகையரக்கன் வெளவிய ஞான்றை நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின் செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந் தாங்கு"

இங்கே கூறியவற்ருல் நட்பின் பெருமையும் புலவர் காட்டும் போர்க்களக் காட்சியின் பயங்கரமும், பெருஞ்செல்வம் திடீரென ஏற்பட்டதால் உண்டாய நகைச்சுவைக்காட்சியும் கண்டோம்.

# நயினை அம்பாளின் நவமான தேர்

## அளவிலாப் பக்தர் கூட்டமும் ஒப்பிலா அருட் காட்சியும்

வியாழக்கிழமை ஆனி 27-ந் திகதி (11-7-57) நயினையம்பதியளித்தகாட்சி ஒப்பு உவமை என்பவற்றுக்கு அப்பாற்பட்ட தாயிற்று. பக்தர்கூட்டம் பல்லாயிரக் கணக்கில் திரண்டு சன சமுத்திரமாகவே தோன்றியது. காலை எட்டு மணியளவில் தமக்கென அமைக்கப்பட்ட நவமான தேரில் அம்பாள் எழுந்தருளி யிருந்து அருள் வழங்கியகாட்சி அன்பர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாயிருந்தது. தேரின் சித்திர வேலை இந்நாட்டில் என்றும் அறியாததென்று எல்லோராலும் மனமாரவாயாரப் புகழப் பெறுகின்றது. இந்நாட்டிற் மாத்திரமல்ல அகில உலகிலுமே இதற்கொப்பான சிற்பச் சிறப்பைத் தாம் கண்டதில்லை என்று புகழுகின்ருர் அவுஸ்திரேலிய அறிஞர் ஒருவர்.

திருப்பணிச்சபையார் சார்பாக தலைவர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்கள் சங்கற்பஞ் செய்தபின் ஏறக்குறைய ஒன்பது மணியளவில் அம்மையார் வீதிவலம் வரத்தொடங்கிப் பன்னிரண்டுமணியளவில் இருப்பிடம் திரும்பினர்.

நயினையம்பதியின் பல சரித்திரச்சிறப்புக்களுடன் தேரைப்பற்றிய பல விளக்கங்களடங்கிய திருப்பணி மலர் ஒன்றை முதலியார் திரு. குல சபாநாதன் அவர்கள் சபையார்சார்பாக எழுதி உதவினர். அதன்பிரதிகள் பெருந்தொகை அடியார் மத்தியில் அன்றே பரவிப் பெரும் ஊக்கத்தை ஊட்டுவித்தது

தேர்த்திருப்பணிக்கு அங்கு திரண்டிருந்த அடியார்கள் பணஉதவி செய்தும் மகிழ்ந்தனர். அன்று திரண்டிருந்த அடியார் சமுத்திரத்துக்குச் செவ்வந்தி மருக்கொழுந்து முதலிய மலர்கள் இந்தியாவிலிருந்து வரச்செய்யப் பெற்று வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சிகளெல்லாம் நெஞ்சையள்ளுந் தன்மையனவாய்ச் சரித்திர முக்கியத்துவத்தையே உண்டாக்கியுள்ளனஎன்பதுஇன்று எவர்வாயிலும் வரும் புகழுரையாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வம்பர்" தாக்கினர் - வவனியா அங்கத்தவரை

பதவியாத்திட்டத்தில் வேலை செய்வோருட் பலர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இலட்சத் தொண்டர் படையிற் சேர்ந்துள்ளனரென்றும் வேறு பல குற்றங்களும் அங்கே நடக்கின்றன என்றும் ஸ்ரீ சி. சுந்தரலிங்கத்துக்கு அறிவிக்கப்பட்டதாம். அவற்றை நேரில் அறியும் பொருட்டு மந்திரியின் அனுமதியுடன் குறித்த திட்டத் தொடர்புடைய சிங்களப் பொறிஇயல் அறிஞருடன் ஸ்ரீ சுந்தரலிங்கம் பதவியாவுக்குப் போனார். வழியில் அவர் சென்ற யந்திர வண்டி நிறுத்தப்பட்டது. ஸ்ரீ சுந்தரலிங்கத்தை வெளியே இழுக்க வம்பர்கள் முயன்றனர். கலகத்தைத் தவிர்க்கும் கருத்துடன் திரு. சுந்தரலிங்கம் திரும்பிவிட்டார்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/425

1. சின்னததம்பி றெபேட் சின்னத்துரை
றக்கா ஒழுங்கை சுண்டிக்குளி
வழக்காளி.

1. வேலுப்பிள்ளை கார்த்தியேசுவும் மனைவியும்
2. சரஸ்வதி மட்டுவில் தெற்கு
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் MB/425-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957 ஞூ புரட்டாதி மீ 14௨ (14 - 9 - 57) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்சொல்லிய எதிராளி வழக்காளிக்கு ரூபாய் ஆயிரத்து முன்னூற்று நாற்பத்தைந்து (1345/-) ஆயிரத்துக்கு 19-8-1955 தொடக்கம் 19-10-55 வரையும் 18 வீத வட்டியும் அதன் பின் கூடிய முழுத் தொகைக்கும் 19-10-55 வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 208 - 85 சதமும் இறுக்க வேண்டும். இதில் 25 - 4 - 56 றில் ரூபா 200/-, 12 - 12 - 56 றில் ரூபா 200/-, 5-2-57 ல் ரூபா 100/- கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கைதடி நுணுவில் நாவக்குளி கோவிற்பற்று தென்மராட்சி இறை சம்பஞ்சம் என்னும் காணி 3¾ பரப்பு, இதில் மூன்றில் இரண்டு பங்கு காணி மச்சிடித் தோட்டமும் அமல் தோட்டமும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சங்கரப்பிள்ளை கதிரவேலுவும், பங்காளரின் ஆதனமும், மேற்கு வேலாயுதர் கோபாலபிள்ளையும் பங்காளரின் ஆதனமும், தெற்கு றோட்டும் இவ்வளவும் D. 203/297-ம் நம்பரில் பதியப்பட்டிருங்குறது.

R. Kanagaratnam
Commissioner

R. Kanagaratnam
No 35 Chundikuly
Jaffna
M 67 19-7

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B, 1545

1 பொன்னம்பலம் பாலசுப்பிறமணியம்
2 பெண் கமலாம்பிகை
வேலணை கிழக்கு
வழக்காளிகள்

சண்முகம் அம்பலவாணர் புங்குடுதீவு கிழக்கு
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் M B 1545-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத் கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகளை 1957-ம் ஆண்டு ஆவணி மீ 31௨ (31-8-57) சனிக்கிழமை முற்பகல் பத்தரை மணி தொடக்கம் அந்தக் காணிகளுள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 13160 இதில் ரூபா 10,000 ககு 18-3-57 தொதிககம் 7-5-57 திகதி வரைக்கும் 100-க்குஒன்பது வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுத்தொகை இறுபடும் வரைக்கும் 100-க்கு ஐந்துவீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 225.

ஆதன விபரங்கள்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு கிளக்கிறை "வேலையநாயன் புலம்" நில.பர. 50 தும் செய்பயிர் வான்பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு முத்தையா பெண் ஞானம்மாவுக்கும், பங்காளருக்கும்மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு கதிரவேலு செல்லத்தரைக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், மேற்கு காசிநாதர் பெண் கதிராசிப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வெலிச்சோர் வயித்தியனுக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் நில, பர. 24 குளி 1 1/2.

2 மேற்படி புங்குடுதீவு கிழக்கிறை "நரிபெறல" நில பர 48 3/8 ம் அதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு கணபதி நீலையினரின் உருமைக்காறரின் ஆதனம், மேற்கு முத்துக்குமாரு பொன்னையாவுக்குரிய ஆதனம், தெற்கு முத்துவேலு கைம்பெண் தையலம்மையின் ஆதனம், இதில் சொரியலாய் அரைவாசி.

3 மேற்படி புங்குடுதீவு மேற்கிறை "பீச்சாம்பிட்டிக்கு வடமேற்கு வேலி" நில பர ஏழும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு நல்லதம்பி கைம்பெண் சின்னத்தங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆனம். வடக்கு ஆறுமுகம் சுப்பையாவுக்குரிய ஆதனம், மேற்குறோட்டு, தெற்கு இராமு கந்தையாவுக்கும் பெண் தங்கம்மாவுக்கும் உரிய ஆதனம் இதடங்கலும்,

4 மேற்படி புங்குடுதீவு கிளக்கிறை "ஆவரங்காட்டுக்கு வடக்கு" நில. பர' 38ம் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு றோட்டு வடக்கு றோட்டு, மேற்கு றோட்டு, தெற்கு றோட்டு. இது அடங்கலும்.

தா. செல்லையா
கொமிஷனர்.
No 37 கொழும்புத்துறை வீதி
சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்.
M 66 19-7

### கிராமச்சங்கத் தலைவர்கள் தேர்தல்

பின் வரும் கிராமச் சங்கங்களுக்குத் தலைவர்களாக அவற்றுக்கு எதிரிற் குறிக்கப்பட்டோர் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்:—

கொக்குவில்: திரு. சி. அருளம்பலம் வழக்கறிஞர்.
கோப்பாய்: திரு. ரி. சம்பந்தர்.
நீர்வேலி: திரு.வி.இராசா
மல்லாகம்: திரு.பி இளையதம்பி வழக்கறிஞர்.
உடுவில்: திரு. வி. தருமலிங்கம்.
தெல்லிப்பழை: திரு. ரி. கதிரையாண்டி.
மயிலிட்டி: திரு. சி. நடராசா
வட்டுக்கோட்டை: திரு. பி. எம். நடராசா

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1162.

1. நாகமுத்து கனகசபை கோப்பாய் தெற்கு
வழக்காளி.

1. நாகமுத்து சின்னத்துரை. நல்லூர், ஒருவற்குரிய சட்டசம்பந்தமான பிரதிநிதி, ஈடு வைத்தவர் நாகமுத்து பொன்னையா கைம்பெண் செல்லாச்சியும், சிறுபிள்ளைகளும்.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M.B. 1162-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற் சொல்லிய எதிராளி வழக்காளிக்கு ரூபாய் ஐன்னூற்றி ஆறும் சதம் இருபதும் வட்டியும் ரூபாய் மூன்னூற்றி ஐம்பதும் 21-8-56 தொடக்கம் 22-11-56 வரையும் 9 வீத வட்டியுடன் அதற்குப் பின் கூடிய முழுத் தொகைக்கும் காசு கொடுக்கு மட்டும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 191/20சதம் இறுக்க வேண்டும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று நற்லூர் "வீரசங்கப்பத்திராயர்" என்னும் காணி ஒரு பரப்பும் வீடும் செய்பயிர் வகைகளும், மேற்குப்பக்கத்தால் தண்ணீர்ப் பங்கும் வளி வாய்க்கால் உருத்தும். எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு கனகரெட்ணம் பெண் பாக்கியம், மேற்கு சரவணை நாகமுத்துவும் சகோதரமும், தெற்கு சின்னப்பிள்ளை கைம்பெண் சங்கரப்பிள்ளை — வளி உருத்தும். இது முழுத்திலிலும் பிரிக்கப் படாத அரைப்பங்கு,
D. 170/246, இதிலிருந்து D. 221/284 மாற்றப்பட்டிருக்கிறது.

இ. கனகரெட்ணம்
கொமிஷனர்

R. Kanagaratnam
No 35 Chundikuly
Jaffna
M. 67 19-7-57.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

இல M. B. 987

1. கோண்டாவில் அம்பலவாணர் கைம்பெண் பொன்னம்மா தனக்காகவும் காலஞ் சென்று போன அம்பலவாணர் தில்லையம்பலத்தின் ஆதனம்.
பிரதிநிதியாகவும்.

1, இளையதம்பி மதியாபறணம்
2, மனைவி பாக்கியம் இருவரும்.
கொக்குவில்,
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் M. B 987ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணி 1957 ஞூ ஆவணி மாதம் 31 ம் திகதி பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்ற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற் சொல்லிய எதிராளி வளக்காளிக்கு ரூபா நானூற்றி எழுபத்தி நான்கும் (474/=) ரூபாய் மூன்னூறும் (300/—) 21-5-56 தொடக்கம் 13-12-56 வரையும் 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் கொடுக்கும் வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 93-17.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் "அத்தியாலை" என்னும் காணி 20½ பரப்பு. எல்லை கிழக்கு கதிரவேலு பெண் தங்கப்பிள்ளையின் ஆதனமும். வடக்கும் மேற்கும் கந்தசாமி கோவிலின் ஆதனமும் வேறு ஆட்களும் தெற்கு கந்தர் முத்துவின் ஆதனமும் இதற்குள் பிரிக்கப்படாத 2¼ பரப்பும் தண்ணீர் பங்கும், கிழக்குப் பக்கத்தால் வளிவாய்க்கால் உருத்தும்.
D. 203/263

R. Kanagaratnam.
Commissioner

R. Kanagaratnam
No. 35 Chundikuli
Jaffna
M 66 19-7

### கிராமக்கோட்டு நீதிபதி

வண்ணார்பண்ணை வழக்கறிஞர் திரு. கே. வி நவரத்தினம் மூல்லைத்தீவுக் கிராமக்கோட்டு நீதிபதியாக நியமிக்கப்பெற்றுள்ளார்.

### அரசாங்கத் தீர்மானத்துக்கெதிராய்ப் புதுப்பாடசாலைகள்

ஏறக்குறைய நானூறு பள்ளிக்கூடங்களை நடத்தும் புத்த கல்விச் சபையார் 57 புதுப் பள்ளிக்கூடங்களை அரசாங்கத் தீர்மானத்துக் கெதிராய்த் திறந்திருக்கின்றனர். வேண்டிய உதவியை இப் பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் கொடுக்க மறுத்தால் குறித்த சபையார் அரசாங்கத்துக்கெதிராய் நீதி மன்றத்தில் வழக்குத் தொடருவார்களாம்.

—0—

### விவேகானந்த சபையில் இளைஞர் இயக்கம்

கொழும்பு விவேகானந்த சபையில் 13 7-57 சனிக்கிழமை இளைஞர் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

படக்காட்சி ஒன்றுடன் கைப்பந்து மேசைப்பந்துப் போட்டி ஒன்று விவேகானந்தசபைக் குழுவுக்கும, நீர்கொழுபபு இந்துவாலிபர் சங்கக் குழுவுக்குமிடையில்நடைபெற்றது.

கைப்பந்தில் இந்துவாலிபர் சங்கத்தாரும் மேசைப்பந்தில் விவேகானந்த சபையாரும் வெற்றிபெற்றனர்.

விளையாட்டுப் போட்டிகளின்பின் நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தாருக்கு விவேகானந்த சபையார் ஒரு விருந்துபசாரமளித்தனர்.

### ஆலயங்களில் பக்தி மார்க்கம்

ஆலயங்களிலே கையாளப்படும் ஒலிபெருக்கியில் தெருப் பாடல்களைத் தவிர்த்து தேவார திருவாசகங்கள் ஒலிப்பதிவான இசைத்தட்டுகள் ஒலிபரப்பப்பெற்றும், நாதஸ்வரம் வாசிப்போரும் அவ்வாறே திருமுறைப் பாடல்களை வாசித்தும் பக்தி மார்க்கத்தின் பண்பாட்டை வளர்க்க முயல வேண்டும். ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பக்தி மார்க்கத்தை நன்கு வளர்க்கும் முறையில் அங்கு நிகழும் பாடல்கள் அமையுமாறு விழாச்செய்வோர் முயற்சி எடுத்தால் அது பயனுடையதாக விளங்கும் என்று சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவிலில் "இறைவனும் இசையும்,' என்னும்பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்த புலவர்மணி பிரம்ம ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் கூறினர்.

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாபநிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்துமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றதத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்
Std 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தமிழ் வளர்ச்சி

—:0:—

## பத்திரிகையாளரும் மக்களும் செய்ய வேண்டியவை

"செய்திப் பத்திரிகையாளர்கள் தமிழை வளர்க்க முன் வர வேண்டும். பிறமொழிச் சொற்களைக் கலவாது எழுத வேண்டும். தனித் தமிழ் பத்திரிகைகளையே தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும். செய்திப் பத்திரிகையாளர்கள் விரும்பினல் தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலப்பதைத் தடுக்க முடியும். இதுவரை அவர்கள் தான் நாளொன்றுக்கு ஓரிரு சொற்கள் விகிதம் தமிழில் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சை ஏற்றிவிட்டார்கள். இனிமேலாவது அவர்களுடைய உள்ளம் திருந்தினல் தான் தமிழ் திருந்தும். அவர்கள் திருந்தாவிட்டால் அவர்களை மக்கள் திருத்த வேண்டும். தனித் தமிழ்ப் பத்திரிகைகளையே தமிழ் மக்கள் ஆதரிப்பதென்று ஆரம்பித்தால் அவைதாமாகவே திருந்திவிடும் என்று திருச்சித் தமிழ்ச் சங்க ஆனித் திருவிழாவில் அறிஞர் திரு. கி. ஆ. பே. விசுவநாதம் அவர்கள் தலைமை வகித்துப் பேசும்போது கூறினர்.

## மயிலிட்டிக் கிராமச்சங்க ஆண்டறிக்கை

தாங்கள் செய்த சேவைகளை அறியத்தரும் ஆறுவருட அறிக்கை ஒன்றை மேற்படி சங்கத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.

சுகாதாரம், பிரசவ சிகிச்சை, மருந்துச்சாலை, கிணறுகள், குளங்கள், தெருக்கள், ஒழுங்கைகள், வெள்ளவாய்க்கால்கள், சந்தைகள், சனசமூகநிலையங்கள், விளையாட்டு முன்றில்கள், மயானங்கள், மின்சாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தகுந்தசேவை செய்யப்பெற்றிருப்பதாக அறிக்கையிற் காணவரும் உண்மை அப்பகுதி மக்களுக்கு மாத்திரமன்றி ஏனைய சங்கங்களுக்கும் உற்சாகமூட்டுவதா யிருக்கும். வரி அறவீடுதலிற் சிறிது வருத்தமும், மலகூடங்கள் வேண்டியவாறு அமையாது வழிதெருக்கள் முதலிய பல இடங்களில் மலங்கழித்தலும்மேலேகண்ட உற்சாகத்தை ஒருவாறு ஊறுபடுத்துகின்றன. நிலைமையைத் திருத்துவதில் சங்கத்தாருடன் ஒத்துழைத்தல் அப்பகுதி மக்களின் கடமையாகும்.

## கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை கார்த்திகை — 1957

வடமாகாண ஆசிரிய சங்கத்தினல் நடாத்தப்படும் இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 25–9–57 க்கு முன்பதாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 1-8-57 க்கு முன்பதாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க் காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்க,

1957—58 பரீட்சைக்குழு உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:

தலைவர் :
திரு. கே. பூரணம்பிள்ளை,
அதிபர், காட்லிக்கல்லூரி
பருத்தித்துறை.


கௌரவ காரியதரிசி:
திரு. ஏ. ஆர். இராசநாயகம்
இந்துக்கல்லூரி, கொக்குவில்.

உபகாரியதரிசி :
திரு. ஏ. இராசசிங்கம்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

1958ம் ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள் புத்தகங்கள் ஆதியனவற்றைப்பற்றி 28-7-57 க்கு முன் கருத்துக்கள் தெரிவிக்கும் வண்ணம் பாடசாலை அதிபர்களும் மற்றையோரும் வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு : சங்கீதம் (வாய்ப்பாட்டு) இஸ்லாம் ஆகிய இப் பாடங்களும் 1957 - ம் ஆண்டு தொடக்கம் பரீட்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

ஏ. ஆர். இராசநாயகம்
கௌரவ காரியதரிசி,
வட. ஆ. ச. பரீட்சைக்குழு.
655 கே கே எஸ் ரேட்,
யாழ்ப்பாணம்.
M 61 19-7-57




## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புத்தாண்டு ஆட்சிக்குழு

13-7-57 சனிக்கிழமை மாலை 4 மணிக்குத் தமிழ்ச் சங்க இல்லத்தில் சங்கத் தலைவர் பண்டிதர் திரு. கா பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் முயற்சிகளைச் செம்மையாக நடத்துவதற்கு நூல்நிலையக் குழு, பேச்சுக் கட்டுரைப் போட்டிக் குழு, இலக்கியப்பணிக் குழு, சங்க இல்லமேற்பார்வைக்குழு முதலியன அமைக்கப்பட்டன

பின்வரும் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

1 வெள்ளவத்தை பகுதியிற்றமிழ் பேசும் மக்கள் பலர் வாழ்வதால் வெள்ளவத்தை தபால் அலுவலகத்தில் தமிழில் தந்தி அனுப்புவதற்கு வேண்டிய வசதிகளை உடனே அமைத்துத் தருமாறு தபால் ஒலிபரப்பு அமைச்சரைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கேட்டுக்கொள்ளுகின்றது

2 கொழும்பு மாநகரப் பொதுநூல் நிலையத்தில் தமிழ்நூல்கள் மிகக் குறைவாயிருப்பதால் அவற்றைக் கூட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுக்குமாறு கொழும்பு மாநகர சங்கத் தலைவரை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகின்றது.

3 வானொலி நிலையத் தமிழ்ப்பகுதி ஆலோசனைச் சபையில் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பிரதிநிதி ஒருவருக்கு இடம் அளிக்கவேண்டுமெனத் தபால் ஒலிபரப்பு அமைச்சரை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது.

4 (அ) தமிழ்மொழி, தமிழிலக்கியம், தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம் முதலியவற்றை ஓம்பிவரும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு ஒரு மணிமண்டபம் அமைப்பதற்கு ஐம்பதினுயிரம் ரூபா(50 000 நன்கொடை அளிக்குமாறும்.

(ஆ) இலங்கையில் வெளியாகும் தமிழ் நூல்களிற் சிறந்தனவாகிய பத்து நூல்களுக்குப் பரிசில் அளிப்பதற்கு ஐயாயிரம் ரூபா (5,(00) இச்சங்கத்துக்கு ஆண்டுதோறும் அளிக்குமாறும் உள்ளூராட்சி கலாகாரத் துறை அமைச்சரை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது.

5 ஈழத்துப் புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்கள் யாவற்றையும் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கு இச்சங்கத்துக்கும் இயன்ற உதவி செய்யுமாறு தமிழ்ப் பெருமக்களை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது.

தொல்பொருள் ஆராய்ச்சி விசாரணைக் குழுவில் ஓர் தமிழ்ப்பேரறிஞரையும்உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அவர்களை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகின்றது.

—0—

## கிரகங்களுக்கிடையிற் பறக்கும் முயற்சி

—0—

ஆண்டுகள் செல்லச் செல்ல நவீன ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்படடுவருகின்றன; விஞ்ஞான முன்னேற்றத்தினல் இந்த ஆயுதங்களுள் சில மனித சக்திக்கும் அப்பாற்பட்ட முறையில் இயங்கத் தொடங்குகின்றன.

இந்த அதிவிரைவான இயக்கத்திற்கு மனித சக்தி ஈடுகொடுக்க முடியுமா? என்பது விஞ்ஞானிகளின் பிரச்னையாயிருந்துவருகின்றது.

கிரகங்களுக்கிடையே பறப்பதற்கு இப்பொழுது முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. கிரகங்களுக்கிடையே பறக்கும் முயற்சியில் மனிதன் எந்த முறையில் தனது திறமைகளைப் பயன்படுத்தி வெற்றி காண முடியும் என்பது பற்றி அமெரிக்க விமானப்படை ஆராய்ந்து வருகின்றது. 5 உறுப்பினர்கள்கொண்ட பத்துக் குழுக்கள் இந்த ஆராய்ச்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 21—7—57 —— 27—7—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய உத்தியோக கருமங்கள்பற்றி நீர் இந்தவாரம் கவனமாயிருக்கவேண்டும். மேலதிகாரிகளுடன் தொந்தரவுகளுக்கும் சண்டைகளுக்கும் இடமுண்டு. நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். தன லாபமும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். உம்முடைய கருமங்களை நீர் இலகுவாக ஒழுங்கு பண்ணக்கூடியதா யிருக்கும். குடும்பக்கருமங்கள் இன்னும் தொடர்ந்து தளப்பமாகவேயிருக்கின்றன.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

இந்தவாரம் மனச் சமாதானம் இருக்கமாட்டாது. அதிக கண்டனங்களை நீர் முன்னிடவேண்டிவரும் ஆனல் உம்முடைய ஆசைகளை நீர் அடையக் கூடியதாயிருக்கும். போட்டியிடுவோரை வெல்லுவதும் நிச்சயம்,

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

கருமங்கள் இந்தவாரம் அலங்கோலமாயிருக்கும். உம்முடைய சொந்தக் கருமங்களை நீர் ஒழுங்கு பண்ணமாட்டாது வருத்தப்படுவீர். மனச்சலனங்களுக்கும் இரகசியப் பகைவர்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. தேக சுகம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

தனலாபம் நிச்சயம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனல் மனச் சமாதானமிருக்க மாட்டாது, கந்தோரில் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும், தேக சுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. கண்நோய்களுக்கிடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

தனலாபமும் நண்பர் உதவியும் இந்தவாரம் நிச்சயம். எந்த ஒரு புதுக்கருமத்தையும் நீர் அச்சமில்லாமல் தொடங்கலாம். எதிரிகள் அழிவும் சமூகசித்தியும் நிச்சயம், ஞாயிறும் திங்கள் காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும்,

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

நீர் இந்தவாரம்சண்டை தொடுக்க முந்துவீர். குடும்பக் கருமங்கள் தளப்பமாயிருக்கும். ஆனல் பணத்துறையில் நீர் அதிக திருத்தத்தைக் காண்பீர், புகழும் வழக்கு வெற்றியும் நிச்சயம். திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

பணக் கருமங்களுக்கு நல்ல வாரம். ஆனல் குடும்பச்சூழலில் எல்லாம் நல்லாயில்லை. பிதாவழி இனத்தவரால் தொந்தரவுகளுக்கிடமுண்டு, ஒன்றையும் புதிதாய்த் தொடங்க [illegible] புதன்பிற்பகல் [illegible] கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

உமக்கு இந்தவாரம் தலை நிறைந்த தொந்தரவாயிருக்கும். தேக சுகம் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது. அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். புது முயற்சிகளுக்கு ஓர் தடை உண்டாகும் கடைசி நாள் எல்லாவற்றிலும் பழுதானது.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டப் 1, 2ம் பாதம்.**

குடும்பக் குழப்பங்கள் தொடர்ந்திருக்கும். சுகவீனங்களுக்கும் இடமுண்டு, உத்தியோகத் துறையில் ஒரு நல்ல வாரம். நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

உம்முடைய முயற்சிகளில் நீர் இந்தவாரம் சித்தியடைதல் நிச்சயம். ஆரும்வீடு மிக வலியதாய் இருத்தலின் எதிர்ப்பு அற்றுப் போதலைக் காண்பீர். தனலாபமும் நிச்சயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

உத்தியோகத் துறையில் எல்லாம் நல்லாயிருந்தாலும் உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது தனலாபங்கள் நிச்சயம், உமக்கு நெருங்கிய ஒருவருடன் நீர் கோபி[illegible] மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 19-7-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org